August 14, 2025

**BSE Limited**
Phiroze Jeejeebhoy Towers,
Dalal Street,
Mumbai - 400 001

**Scrip Code:** 532826

**National Stock Exchange of India Limited**
Exchange Plaza, C-1, Block G,
Bandra Kurla Complex, Bandra (E),
Mumbai - 400 051

**Trading Symbol:** RAJTV

Dear Sir/Madam,

**Sub.:** **Submission of Extracts of the Newspaper Publications of Unaudited Financial Results for the Quarter Ended June 30, 2025**

**Ref.:** **Regulation 30 and Regulation 47 of the Securities and Exchange Board of India (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015**

With reference to the above, please find enclosed copies of the extracts of newspaper publications of the unaudited financial results for the quarter ended June 30, 2025, as published in:

1. "Trinity Mirror" (English) – August 14, 2025
2. "Makkal Kural" (Tamil) - August 14, 2025

This will also be hosted on the company's website at www.rajtvnet.in

This is for your information and records.

Thanking You.

Yours faithfully,
For **Raj Television Network Limited**

MANI SAMY PILLAI RAAJHENDHRAN
Digitally signed by MANI SAMY PILLAI RAAJHENDHRAN
Date: 2025.08.14 17:42:34 +05'30'

**Raajhendhran M**
**Managing Director**
**DIN: 00821144**

**Encl.:** a/a

# VIT, Narayani Hospital MoU to boost healthcare research



Vellore, Aug 14: Vellore Institute of Technology (VIT) and Sri Narayani Hospital and Research Centre (SNHRC) have entered into a Memorandum of Understanding (MoU) to strengthen collaboration in healthcare research and education. The agreement was signed at the VIT campus in Vellore.

The signing ceremony was presided over by VIT founder and chancellor G. Viswanathan, in the presence of Balaji Nandagopal, Director and Trustee of the Sri Narayani Group of Institutions. Geetha Manivasagam, Dean of VIT's School of Healthcare Sciences and Engineering, delivered the welcome address.

Highlighting the significance of the partnership, Viswanathan said the collaboration will enable VIT faculty and SNHRC's medical professionals to jointly work on research and development projects in healthcare. The initiative will also help transfer advanced research knowledge to engineering students.

Under the MoU, VIT's undergraduate, postgraduate, and research students will gain access to clinical training, project work, student exchange programs, professional training, and collaborative research opportunities at SNHRC. Doctors from the hospital will also have the option to pursue tailored PhD programs at VIT. Both institutions will jointly undertake advanced research projects funded by VIT and external agencies.

The event was attended by VIT Vice President Shekhar Viswanathan, Executive Director Sandhya Bendareddy, Associate Vice Chancellor Parthasarathy Mallick, and SNHRC Associate Director Dr. Ramprasad Srinivasan, among others.



# Apollo Speciality Hospitals unveils nextgen cath lab

**Chennai, Aug 14:** Apollo Speciality Hospitals, Teynampet, has introduced its most advanced Cath Lab, marking a major milestone in Chennai's healthcare capabilities. This state-of-the-art facility enables doctors to perform complex, life-saving procedures without open surgery, enhancing speed, precision, and safety in cardiology, neurology, and interventional oncology.

The facility was inaugurated by Thiru M.P. Swaminathan, Hon'ble Minister for Tamil Development, Information & Publicity, Government of Tamil Nadu, in the presence of Mr. Harshad Reddy, Director – Group Oncology & International, Dr. Madhu Sasidhar, President & CEO of Apollo Hospitals, and Dr. A.L. Narayanan, Clinical Lead and HOD, Interventional Cardiology, Apollo Speciality Hospitals.

**Enhanced precision, faster response**

Mr. Harshad Reddy said, "The launch of this advanced Cath Lab is another step in Apollo's commitment to technology-led, precision healthcare. It empowers our doctors to diagnose faster, act decisively in emergencies, and deliver minimally invasive treatments across cardiology, neurology, and oncology with unmatched safety and accuracy. Patients will now benefit from quicker interventions and better recovery outcomes."

**Leap into future of interventional medicine**

Dr. A.L. Narayanan described the new Cath Lab as "the future of patient-centric interventional care." Equipped with GPS-like imaging for the human body and real-time navigation, the facility allows for smaller incisions, reduced radiation exposure, and faster recovery. "This level of precision helps us tackle even the most complex cardiac, neurovascular, and oncological cases swiftly and effectively," he added.

**Cutting-edge technology**

Strategically located in central Chennai, the Cath Lab features high-resolution 3D imaging, advanced stent motion visualisation, comprehensive neurovascular support, and low-dose radiation technology. The facility enables critical interventions for heart attacks, strokes, complex vascular conditions, and certain cancers—often within minutes—through minimally invasive catheter-based procedures. This approach reduces the need for open surgery, shortens hospital stays, and improves patient outcomes.


## KANDAGIRI SPINNING MILLS LIMITED

Regd. Office : Mill Premises, Post Box No.3, Udayapatti (P.O.), Salem 636 140
(CIN : L17111TZ1976PLC000762)
e-mail : sales@kandagirimills.com Phone 0427 2244400 Fax 0427 2244422
Web site : www.kandagirimills.com

EXTRACT OF STANDALONE UNAUDITED FINANCIAL RESULTS FOR THE QUARTER ENDED JUNE 30, 2025

(Rupees Lakhs)

| Sl. No. | Particulars | Three months ended | | | Year Ended |
|---|---|---|---|---|---|
| | | 30.06.2025 | 31.03.2025 | 30.06.2024 | 31.03.2025 |
| | | Unaudited | Audited | Unaudited | Audited |
| 1 | Total income from Operations | 62.15 | 92.36 | 10.65 | 195.73 |
| 2 | Other Income | 0.04 | 0.09 | 0.04 | 7.37 |
| 3 | Net Profit /(Loss) for the period (before Tax, Exceptional and Extraordinary items) | (118.82) | 50.93 | (37.70) | (79.28) |
| 4 | Net Profit /(Loss) for the period before tax | (118.82) | 50.93 | (37.70) | (79.28) |
| 5 | Net Profit/(Loss) for the period after tax | (118.82) | 50.93 | (37.70) | (79.28) |
| 6 | Total Comprehensive Income for the period | (118.82) | 50.93 | (37.70) | (79.28) |
| 7 | Equity Share Capital | 385.75 | 385.75 | 385.75 | 385.75 |
| 8 | Earnings Per Equity Share of Rs 10/-each (for continuing operations) Basic and Diluted (in Rupees) | (3.08) | 1.32 | (0.99) | (2.06) |
| 9 | Other Equity | - | - | - | (1111.10) |

EXTRACT OF CONSOLIDATED UNAUDITED FINANCIAL RESULTS FOR THE QUARTER ENDED JUNE 30, 2025

(Rupees Lakhs)

| Sl. No. | Particulars | Three months ended | | | Year Ended |
|---|---|---|---|---|---|
| | | 30.06.2025 | 31.03.2025 | 30.06.2024 | 31.03.2025 |
| | | Unaudited | Audited | Unaudited | Audited |
| 1 | Total income from Operations | 62.15 | 92.36 | 10.65 | 195.73 |
| 2 | Other Income | 0.04 | 0.09 | 0.04 | 7.37 |
| 3 | Net Profit /(Loss) for the period (before Tax, Exceptional and Extraordinary items) | (116.28) | 56.39 | (36.59) | (70.65) |
| 4 | Net Profit /(Loss) for the period before tax | (116.28) | 56.39 | (36.59) | (70.65) |
| 5 | Net Profit/(Loss) for the period after tax | (116.28) | 56.39 | (36.59) | (70.65) |
| 6 | Total Comprehensive Income for the period | (116.28) | 56.39 | (36.59) | (70.65) |
| 7 | Equity Share Capital | 385.75 | 385.75 | 385.75 | 385.75 |
| 8 | Earnings Per Equity Share of Rs 10/-each (for continuing operations) Basic and Diluted (in Rupees) | (3.01) | 1.46 | (0.95) | (1.84) |
| 9 | Other Equity | - | - | - | (1094.65) |

**Note:**
The above is an extract of the detailed format of Standalone and Consolidated Unaudited Financial Results filed with the Stock Exchange under Regulation 33 of the SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015. The full format of the Statement of Standalone and Consolidated Unaudited Financial Results are available at the web site of the Company and BSE limited at www.kandagirimills.com and www.bseindia.com respectively. Also scan the QR code placed herewith to view the full format of the referred financial results:

Place: Salem
Date: 13.08.2025

For and on behalf of the Board
S. Sivakumar
Managing Director



## RAJ TELEVISION NETWORK LIMITED

The People's Channel

CIN: L92490TN1994PLC027709
Registered Office: 32, Poes Road, Second Street, Teynampet, Chennai- 600018 Telephone: 044-24351307/1898,
E-mail: comp secr@rajtvnet.in,Website:www.rajtvnet.in

**UNAUDITED FINANCIAL RESULTS FOR THE QUARTER ENDED JUNE 30, 2025**

Based on the recommendations of the Audit Committee, The Board of Directors of the Company, at its meeting held on Wednesday, August 13, 2025, has approved the Un-audited Financial Results for the quarter ended June 30, 2025.
The said Financial Results along with the Statutory Auditor's Report are available on the Company's website at www.rajtvnet.in and can also be accessed by scanning the Quick Response (QR) code.

Place: Chennai
Date: 13.08.2025

For and on behalf of Raj Television Network Limited
Sd/
M Raajhendhran
Managing Director
DIN: 00821144

Note: The above information is in accordance with Regulation 33 read with Regulation 47(1) of SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015.



## KANCHI KARPOORAM LIMITED

CIN: L30006TN1992PLC022109
Registered Office: Parandur Road, Karaipettai Post, Kanchipuram Tk - 631552, Tamil Nadu, India.
Telephone: 044-2640 1914/15/16/17, E-mail: info@kklgroup.in, Website: www.kklgroup.in

**STATEMENT OF UNAUDITED FINANCIAL RESULTS (STANDALONE AND CONSOLIDATED) FOR THE QUARTER ENDED 30TH JUNE 2025**

Kanchi Karpooram Limited ('the Company') hereby informs that the Board of Directors at their meeting held on Wednesday, 13th August 2025, has inter alia considered and approved the Unaudited (Standalone and Consolidated) Financial Results for the quarter ended 30th June 2025.
The Financial Results along with the Limited Review Report, has been posted on the Company's website at https://www.kanchikarpooram.com/financial_results.php and can also be accessed by scanning the QR code.

Date: 13-08-2025
Place: Chennai

For and behalf of the Board of Directors of
KANCHI KARPOORAM LIMITED
Sd/-
Suresh Veerchandji Shah
Managing Director
DIN: 01659809

Note: The above intimation is in accordance with Regulation 33 read with regulation 47(1) of the Securities and Exchange Board of India (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015.



## SPEL Semiconductor Limited

an IC Assembly & Test Company

CIN: L32201TN1984PLC011434
Registered Office & Factory : No. 5, CMDA Industrial Estate, Maraimalai Nagar, Tamil Nadu - 603209
Email: info@spel.com Website: www.spel.com

**[Regulation 47(1)(b) of the SEBI (LODR) Regulations, 2015]**

SPEL Semiconductor Limited

**EXTRACT OF STATEMENT OF UNAUDITED FINANCIAL RESULTS FOR THE QUARTER ENDED 30TH JUNE 2025**

(₹ in Lakhs)

| Sl.no | Particulars | Quarter Ended | | | Year Ended |
|---|---|---|---|---|---|
| | | 30.06.2025 (Unaudited) | 31.03.2025 (Audited) | 30.06.2024 (Unaudited) | 31.03.2025 (Audited) |
| 1. | Total Income from Operations | 193.39 | 245.24 | 213.47 | 786.42 |
| 2. | Net Profit / (Loss) for the period (before tax and exceptional items) | (242.51) | (305.41) | (185.22) | (891.87) |
| 3. | Net Profit / (Loss) for the period before tax (after exceptional items) | (558.78) | (837.18) | (359.20) | (2,149.01) |
| 4. | Net Profit / (Loss) for the period after tax (after exceptional items) | (558.78) | (799.59) | (357.99) | (2,104.66) |
| 5. | Total Comprehensive Income for the period comprising profit / (loss) for the period (after tax) and other comprehensive income (after tax) | (558.78) | (783.86) | (357.99) | (2,064.69) |
| 6. | Paid-up Equity Share Capital | 4,611.74 | 4,611.74 | 4,611.74 | 4,611.74 |
| 7. | Other equity | - | - | - | - |
| 8. | Earnings Per Share of Rs 10/- each (not annualised) | | | | |
| | a) Basic | (1.21) | (1.73) | (0.78) | (4.56) |

**Notes:**
The above is an extract of the detailed format of unaudited Financial Results for the quarter ended June 30, 2025 filed with the Stock Exchange under Regulation 33 of the SEBI (Listing and Other Disclosure Requirements) Regulations, 2015. The full format of the Quarterly Financial Results are available on the Stock Exchange website www.bseindia.com and on Company's website www.spel.com.

For and on behalf of the Board of Directors

Place : Chennai
Date : August 13, 2025

P. Balamurugan
Head Operations & Whole-Time Director
DIN: 07480881



## Sri Sarvaraya Sugars Limited

Regd.office:12, Ethiraj Salai, Egmore, CHENNAI - 600 008
Tel:044-28276182 Email Id: chennai@srisarvarayasugars.in
CIN:L01115TN1956PLC003435

**EXTRACT OF UNAUDITED FINANCIAL RESULTS FOR THE QUARTER ENDED 30TH JUNE, 2025**

Rs.in Lakhs

| Sl. No. | Particulars | Quarter Ended | | Year ended |
|---|---|---|---|---|
| | | 30.06.2025 | 30.06.2024 | 31.03.2025 |
| | | (Unaudited) | (Unaudited) | (Audited) |
| 1. | Total Income from Continuing Operations | 26,634.11 | 33,371.35 | 87,474.97 |
| 2. | Net Profit/ (Loss) for the period (before tax, exceptional and/or extraordinary items) from Continuing Operations | 2,159.33 | 4,611.47 | 4,001.23 |
| 3. | Exceptional Items | - | - | 336.33 |
| 4. | Net Profit/ (Loss) for the period before tax (after exceptional and/ or extraordinary items) from Continuing Operations | 2,159.33 | 4,611.47 | 3,664.90 |
| 5. | Net Profit/ (Loss) for the period after tax (after exceptional and/or extraordinary items) from Continuing Operations | 1,551.10 | 3,382.55 | 2,916.85 |
| 6. | Net Profit/ (Loss) from Discontinued Operations | (5.97) | 38.97 | 349.45 |
| 7. | Total comprehensive income for the period (Comprising Profit/ (Loss) for the period (after tax) and Other comprehensive income) from Continuing and Discontinued Operations | 1,510.32 | 3,327.86 | 3,100.67 |
| 8. | Equity share capital | 304.81 | 304.81 | 304.81 |
| 9. | Other Equity | 46,445,43 | 45,527.92 | 44,935.06 |
| 10. | Earnings per share (of Rs. 10/- each) from Continuing and Discontinued Operations | | | |
| | Basic: | 50.69 | 112.25 | 107.15 |
| | Diluted: | 50.69 | 112.25 | 107.15 |

**Notes:**
1.The above Unaudited Financial Results of the Company have been reviewed by the Audit Committee and approved by the Board of Directors at their meeting held on 13th August, 2025. The Statutory Auditors of the Company have carried out Limited Review of the Unaudited Financial Results for the quarter ended 30th June, 2025.
2.The above is an extract of detailed format of Unaudited Financial Results filed with the stock exchanges under Regulation 33 of SEBI (Listing and other disclosure requirements) Regulations 2015.
3.These Unaudited Financial Results are prepared in accordance with the Indian Accounting Standards (Ind AS) as prescribed under Section 133 of the Companies Act, 2013 read with relevant rules issued there-under and relevant amendment rules thereafter.

Place: Chennai
Date : 13th August, 2025

For and on behalf of the Board of Directors
Dr.S.B.P.P.Rammohan
Managing Director
DIN : 00586641



## CG-VAK

SOFTWARE AND EXPORTS LIMITED.
AN ISO 9001:2015 & 27001:2013 CERTIFIED COMPANY
Regd. Off. 171 Mettupalayam Road, Coimbatore – 641 043
Website: www.cgvak.com, e-mail:investorservices@cgvak.com
CIN:L30009TZ1994PLC005568

**Statement of Unaudited Standalone and Consolidated Financial Results for the Quarter ended 30.06.2025**

(Rs. In Lakhs)

| | STANDALONE | | | | CONSOLIDATED | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | QUARTER ENDED | | | YEAR ENDED | QUARTER ENDED | | | YEAR ENDED |
| Particulars | 30.06.2025 | 31.03.2025 | 30.06.2024 | 31.03.2025 | 30.06.2025 | 31.03.2025 | 30.06.2024 | 31.03.2025 |
| | Unaudited | Audited | Unaudited | Audited | Unaudited | Audited | Unaudited | Audited |
| Total income from operations | 1,420.46 | 1,444.50 | 1,268.86 | 5,500.07 | 1,882.56 | 1,997.41 | 1,855.97 | 7,850.50 |
| Net Profit / (Loss) for the period before tax (before Exceptional and Extraordinary items) | 363.41 | 311.08 | 228.36 | 1,197.78 | 377.32 | 338.70 | 234.43 | 1,248.69 |
| Net Profit / (Loss) for the period before tax (After Exceptional and Extraordinary items) | 363.41 | 311.08 | 228.36 | 1,197.78 | 377.32 | 338.70 | 234.43 | 1,248.69 |
| Net Profit / (Loss) for the period after tax (after Exceptional and Extraordinary items) | 271.56 | 226.21 | 170.94 | 891.74 | 281.27 | 244.07 | 174.71 | 926.96 |
| Total Comprehensive Income for the period (Comprising Profit/(Loss) for the period (after tax) and Other Comprehensive Income (after tax) | 374.82 | 180.43 | 180.69 | 860.66 | 384.53 | 198.29 | 184.46 | 895.88 |
| Equity Share Capital | 505.02 | 505.02 | 505.02 | 505.02 | 505.02 | 505.02 | 505.02 | 505.02 |
| Earnings Per Share (of 10/- each) | | | | | | | | |
| Basic : | 5.38 | 4.48 | 3.38 | 17.66 | 5.57 | 4.83 | 3.46 | 18.35 |
| Diluted: | 5.38 | 4.48 | 3.38 | 17.66 | 5.57 | 4.83 | 3.46 | 18.35 |

1)The above is an extract of the detailed format of Quarter ended Financial Results filed with the Stock Exchanges under Regulation 33 of the SEBI (Listing Obligtions and Disclosures Requirements) Regulations, 2015. The full format of the Quarter ended Financial Results are available on the website of the Company (www.cgvak.com) and Stock Exchange website (www.bseindia.com).
2) Figures for the previous year have been regrouped/rearranged wherever necesssary to correspond with current period figures.

For and on behalf of the Board
For CGVAK Software And Exports Limited
-Sd-
G Suresh
Managing Director & CEO
DIN 00600906

Place : Coimbatore
Date : 13.08.2025

# ரூ. 700 கோடியில் செங்கல்பட்டில் ஜப்பான் மின் கருவிகள் உற்பத்தி ஆலை

## ஸ்டாலின் முன்னிலையில் ஒப்பந்தம் கையெழுத்து




சென்னை, ஆக.14–

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் முன்னிலையில் இன்று தலைமைச் செயலகத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், ஜப்பான் நாட்டைச் சேர்ந்த கோகி ஹோல்டிங்ன் துணை நிறுவனமான ஹிகோகி பவர் டூல்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனம், செங்கல்பட்டு மாவட்டம், மஹிந்திரா வோர்ல்டு சிட்டியில் அமைந்துள்ள தொழிற் பூங்காவில், ரூ.700 கோடி உறுதியளிக்கப்பட்ட முதலீடு மற்றும் சுமார் 1000க்கும் மேற்பட்ட நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், மின் கருவிகள் உற்பத்தி ஆலை அமைப்பதற்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

இந்தியாவிலேயே இரண்டாவது பெரிய பொருளாதார மாநிலமாக விளங்கி வரும் தமிழ்நாட்டினை, 2030ம் ஆண்டிற்குள் ஒரு ட்ரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரமாக உயர்த்திட வேண்டும் என்று முதலமைச்சர் இலக்கு நிர்ணயித்து, அதனைவிரைவில் எய்திடும் வகையில் அதிக முதலீடுகளை ஈர்த்திடவும், தமிழ்நாட்டின் இளைஞர்களுக்கு அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகளைஉருவாக்கிடவும் தமிழ்நாடு அரசு பல்வேறு முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகிறது. முதலீடுகளை ஈர்ப்பதிலும், அதிக எண்ணிக்கையிலான வேலை வாய்ப்புகளை, குறிப்பாக பெண்களுக்கான வேலை வாய்ப்பு களை உருவாக்குவதிலும் தமிழ்நாடு அரசு சிறப்பாக செயல்படுவதாக, ஒன்றிய அரசின் 2024–25ம் ஆண்டிற்கான பொருளாதார ஆய்வறிக்கையில் புகழாரம் சூட்டப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

ஹிகோகி பவர் டூல்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஜப்பான் நாட்டைச் சேர்ந்த உலகளாவிய நிறுவனமான கோகி ஹோல்டிங் ஜப்பான், ஜெர்மனி, சீனா, அமெரிக்கா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளில் உற்பத்தி ஆலைகளைக் கொண்டுள்ளது. பெங்களூருவை தலைமையிடமாகக் கொண்டுள்ள அதன் துணை நிறுவனமான ஹிகோகி பவர் டூல்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட், 15க்கும் மேற்பட்ட விற்பனை அலுவலகங்கள், 500க்கும் மேற்பட்ட விநியோகஸ்தர்கள் மற்றும் 100க்கும் மேற்பட்ட சேவை மையங்களுடன் விரிவான வலையமைப்பை கொண்டுள்ளது.

ஹிகோகி பவர் டூல்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனம், செங்கல்பட்டு மாவட்டம், மஹிந்திரா வோர்ல்டு சிட்டியில் அமைந்துள்ள தொழிற் பூங்காவில், ரூ.700 கோடி உறுதியளிக்கப்பட்ட முதலீடு மற்றும் சுமார் 1000க்கும் மேற்பட்ட நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், மின் கருவிகள் உற்பத்தி ஆலை அமைப்பதற்கு முதலமைச்சர் முன்னிலையில் இன்றையதினம் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி அருண் ராய், தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் மருத்துவர் தாரேஸ் அகமது, கோகி குழுமத்தின் உலகளாவிய தலைமைச் செயல் அலுவலர் பிரதாப் தெய்வநாயகம், கோகி இந்தியா நிறுவனத்தின் இயக்குநர் பாலசுப்ரமணியன் கோதண்டராமன், உற்பத்தி திட்டத்தின் தலைவர் தமிழரசன் கலைவாணன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர் என்று அரசு செய்தி குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

**அரசு ஊழியர்கள் சம்பள கணக்கு பராமரிக்கும் வங்கிகள் மூலம்**

# விபத்தில் உயிரிழந்த அரசு ஊழியர்கள் குடும்பத்துக்கு ரூ.4.38 கோடி உதவித்தொகை

## ஸ்டாலின் வழங்கினார்




சென்னை, ஆக.14–

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் இன்று தலைமைச் செயலகத்தில், அரசு ஊழியர்களுக்கு ஆயுள் மற்றும் விபத்துக் காப்பீடு உள்ளிட்ட வங்கி சலுகைகளை கட்டணமின்றி வழங்கிட 7 முன்னோடி வங்கிகளுடன் தமிழ்நாடு அரசு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டதன் அடிப்படையில், பாரத ஸ்டேட் வங்கி மற்றும் கனரா வங்கி ஆகிய வங்கிகளால் வழங்கப்பட்ட, விபத்து மற்றும் இயற்கை மரணமடைந்த 5 அரசு ஊழியர்களின் குடும்பத்தினருக்கு விபத்து மற்றும் ஆயுள் காப்பீட்டு தொகை, திருமண உதவித் தொகை மற்றும் உயர்கல்வித் தொகையாக 4 கோடியே 38 லட்சம் ரூபாய்க்கான காசோலைகளை வழங்கினார்.

தமிழ்நாடு அரசின் 2025–26–ம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், நிதியமைச்சர் தாக்கல் செய்தபோது, அரசு அலுவலர்கள் எதிர்பாராத விதமாக விபத்தில் இறந்து போனாலோ அல்லது விபத்தின் காரணமாக நிரந்தர ஊனமடைந்தாலோ தனிநபர் விபத்து காப்பீட்டு தொகையாக 1 கோடி ரூபாய் நிதியினையும், விபத்தில் இறந்த அரசு அலுவலரின் குடும்பத்தில் உள்ள திருமண வயதை எட்டியுள்ள மகளின் திருமண செலவுகளுக்காக மகள் ஒருவருக்கு தலா 5 லட்சம் ரூபாய் வீதம், 2 மகள்களுக்கு 10 லட்சம் ரூபாய் வரை நிதியுதவியும்,

விபத்து காரணமாக இறந்த அரசு அலுவலரின் குடும்பத்தில் பள்ளிக்கல்வியை நிறைவு செய்து கல்லூரியில் உயர்கல்வி பயின்றிடும் அவர்களின் குழந்தைகளுக்கானஉயர்கல்விக்கான உதவித்தொகையாக 10 லட்சம் ரூபாய் வரையும், அரசு அலுவலர்கள் தங்களது பணிக்காலத்தில் எதிர்பாராமல் இயற்கை மரணம் அடைந்தால் ஆயுள் காப்பீட்டு தொகையாக 10 லட்சம் ரூபாயும் வழங்கிட அரசு ஊழியரின் ஊதியக்கணக்கை பராமரித்து வரும் வங்கிகளின் மூலமாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று அறிவித்தார்.

அதன் தொடர்ச்சியாக, அரசு ஊழியர்களுக்கு ஆயுள் மற்றும் விபத்து காப்பீட்டுத் தொகை மற்றும் பிற வங்கிச் சலுகைகளை கட்டணமின்றி வழங்குவதற்காக 19.5.2025 அன்று தலைமைச் செயலகத்தில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் முன்னிலையில் பாரத ஸ்டேட் வங்கி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, இந்தியன் வங்கி, கனரா வங்கி, ஆக்சிஸ் வங்கி, பாங்க் ஆப் பரோடா மற்றும் யூனியன் பாங்க் ஆப் இந்தியா ஆகிய 7 முன்னோடி வங்கிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

இந்த ஒப்பந்தத்தின் மூலம், அரசு ஊழியர்கள் மேற்கண்ட ஏழு வங்கிகளில் சம்பளக் கணக்குகளைப் பராமரித்தால், மேற்கூறிய சலுகைகள் இலவசமாக வழங்கப்படும். இச்சலுகைகள் தவிர, அரசு ஊழியர்களுக்கு தனிநபர் கடன்கள், வீட்டுக் கடன்கள் மற்றும் கல்விக் கடன்கள் ஆகியவற்றில் சலுகை வட்டி விகிதங்களை வழங்கவும் வங்கிகள் ஒப்புக்கொண்டுள்ளன. தற்போது வரை, இத்திட்டத்தின் கீழ் 7,31,670 அரசு ஊழியர்கள் தங்களது ஊதிய கணக்கினை மேற்கண்ட ஏழு வங்கிகளில் இணைத்துள்ளனர்.

தமிழ்நாடு அரசிற்கும், 7 வங்கிகளுக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டப் பிறகு, 5 அரசு ஊழியர்கள் இயற்கையாகவும் மற்றும் எதிர்பாராத விபத்தினாலும் உயிரிழந்துள்ளனர். மறைந்த அந்த அரசு ஊழியர்களின் குடும்பத்தினரின் நலன் கருதி, பாரத ஸ்டேட் வங்கி மற்றும் கனரா வங்கி ஆகிய வங்கிகளால் வழங்கப்பட்ட விபத்து மற்றும் ஆயுள் காப்பீட்டு தொகை, திருமண உதவித்தொகை மற்றும் உயர்கல்வி உதவித்தொகையான 4 கோடியே 38 லட்சம் ரூபாய்க்கான காசோலைகளை முதலமைச்சர் வழங்கினார்.

இந்நிகழ்வில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# முதல்வரின் பெயருக்கு தடை கோரி வழக்கு: ரூ.1 லட்சம் அபராதத்துடன் தள்ளுபடி

சென்னை, ஆக. 14–

உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தில் முதல்வர் பெயரை சேர்க்க எதிர்ப்பு தெரிவித்த பொது நல மனுவை, ஒரு லட்சம் ரூபாய் அபராதத்துடன் தள்ளுபடி செய்து சென்னை ஐகோர்ட் உத்தரவிட்டுள்ளது.

அரசு திட்டங்கள் மக்களை சென்றடையும் வகையில் செயல்படுத்தப்படும் உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தில் முதல்வர் பெயரை பயன்படுத்த தடை கோரி, அதிமுக வழக்கறிஞர் இனியன் என்பவர் சென்னை ஐகோர்ட்டில் பொதுநல மனுவை தாக்கல் செய்திருந்தார்.

சென்னை ஐகோர்ட்டில், அதிமுக வழக்குரைஞர் இனியன், 'உங்களுடன் ஸ்டாலின்' திட்டத்தில் முதல்வர் பெயரை பயன்படுத்த தடை கோரி பொதுநல மனு தாக்கல் செய்திருந்தார்..முன்னதாக, அதிமுக எம்.பி. சி.வி. சண்முகம் தாக்கல் செய்த வழக்கை விசாரித்த உயர்நீதிமன்றம், வாழும் ஆளுமைகளின் பெயர்களை அரசு திட்டங்களுக்குப் பயன்படுத்தக் கூடாது என உத்தரவிட்டிருந்தது. ஆனால், 'உங்களுடன் ஸ்டாலின்', 'நலம் காக்கும் ஸ்டாலின்' திட்டங்களை அதே பெயரில் செயல்படுத்த அனுமதி கோரி அரசுத் தரப்பில் திருத்த மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.சி.வி.சண்முகம் வழக்கில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை எதிர்த்து, திமுக தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரித்த உச்ச நீதிமன்றம், சி.வி.சண்முகத்துக்கு 10 லட்சம் ரூபாய் அபராதம் விதித்து தள்ளுபடி செய்திருந்தது.

இந்நிலையில், தமிழக அரசின் திருத்த மனு, அதிமுக வழக்குரைஞர் இனியன் தாக்கல் செய்த மனுக்கள், தலைமை நீதிபதி எம். எம். ஸ்ரீவாஸ்தவா மற்றும் நீதிபதி சுந்தர் மோகன் அமர்வில் இன்று விசாரணைக்கு வந்தன.

அப்போது தமிழக அரசுத்தரப்பில் ஆஜரான தலைமை வழக்குரைஞர் பி. எஸ். ராமன் மற்றும் திமுக தரப்பு மூத்த வழக்குரைஞர் பி. வில்சன் ஆகியோர், இதே கோரிக்கையுடன் சி.வி. சண்முகம் தாக்கல் செய்த மனுவை சுப்ரீம் கோர்ட் அபராதத்துடன் தள்ளுபடி செய்த உத்தரவு நகலை தாக்கல் செய்தனர்.

சுப்ரீம் கோர்ட் உத்தரவின் அடிப்படையில், சி.வி.சண்முகம், 10 லட்சம் ரூபாய் அபராதத்தை செலுத்தி விட்டதாக, தலைமை வழக்குரைஞர் தெரிவித்தார். இதனையடுத்து, வழக்குரைஞர் இனியனின் மனுவை 1லட்சம் ரூபாய் அபராதத்துடன் தள்ளுபடி செய்து நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

## வாக்கு திருட்டு என்பது ஊழியர்களின் நேர்மை மீதான தாக்குதல்: தேர்தல் ஆணையம் கண்டனம்

புதுடெல்லி, ஆக. 14–

வாக்கு திருட்டு எனக் கூறுவது லட்சக்கணக்கான தேர்தல் ஊழியர்களின் நேர்மை மீதான தாக்குதல் என்று தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

மக்களவைத் தேர்தலின்போது வாக்காளர் பட்டியலில் முறைகேடு செய்யப்பட்டு, வாக்குத் திருட்டு நடைபெற்றதாகக் குற்றம்சாட்டிய ராகுல் காந்தி, கடந்த வாரம் அதற்கான ஆதாரங்களை வெளியிட்டார். ஆனால், இந்தக் குற்றச்சாட்டுகளைத் தலைமைத் தேர்தல் ஆணையம் மறுத்துள்ளது.

இதைத் தொடர்ந்து, தேர்தல் ஆணையத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில், டெல்லி நாடாளுமன்றத்திலிருந்து தேர்தல் ஆணைய அலுவலகம் வரை எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த 300க்கும் மேற்பட்ட எம்.பி.க்கள் பேரணியாகச் சென்றனர். அப்போது ராகுல் காந்தி உள்ளிட்ட எதிர்க்கட்சித்தலைவர்களை டெல்லி காவல்துறையினர் கைது செய்து, பின்னர் விடுவித்தனர்.

இந்தி நிலையில் தேர்தல் ஆணையம் வாக்குத் திருட்டு என்பது தவறான கருத்து என்று கூறியுள்ளது. இது குறித்து தேர்தல் ஆணையம் கூறுகையில், “வாக்குத் திருட்டு போன்ற மோசமான சொற்களைப் பயன்படுத்தி தவறான கருத்தைப் பரப்ப முயல்வது, கோடிக்கணக்கான வாக்காளர்கள் மீதான தாக்குதல் மட்டுமல்ல, லட்சக்கணக்கான தேர்தல் ஊழியர்களின் நேர்மையைப் புண்படுத்துவதும் ஆகும். தேர்தலில் இரண்டு முறை வாக்களித்ததற்கு ஆதாரம் இருந்தால், பிரமாணப் பத்திரத்துடன் ஆணையத்திடம் பகிரலாம்” என்று தெரிவித்துள்ளது.

# தூய்மைப் பணியாளர்களுக்கு 6 புதிய திட்டங்கள் அறிவிப்பு....

(1–ம் பக்கத் தொடர்ச்சி)

பணியின்போது உயிரிழந்தால், தூய்மைப் பணியாளர்கள் நல வாரியத்தின் மூலம் நிதியுதவி வழங்கப்படுகிறது. அவர்களின் குடும்பங்களின் நலனையும், வாழ்வாதாரத்தையும் முழுமையாக உறுதி செய்யும் வகையில் இந்த நிதி உதவியுடன் கூடுதலாக ரூ.5 லட்சம் காப்பீடு இலவசமாக ஏற்படுத்தித் தரப்படும். இதனால், தூய்மைப் பணியாளர்கள் பணியின்போது உயிரிழந்தால் அவர்களின் குடும்பத்துக்கு ரூ.10 லட்சம் இழப்பீடு கிடைக்கும்.

3. தூய்மைப் பணியாளர்கள் அவர்களின் குடும்பத்தினரின் சமூக, பொருளாதார நிலையை உயர்த்திட, அவர்கள் சுய தொழில் தொடங்கும்போது அத்தொழில் திட்ட மதிப்பீட்டில் 35% தொகை அதிகபட்சமாக ரூ.3,50,000 மானியமாக வழங்கப்படும். கடனை திருப்பிச் செலுத்த ஏதுவாக 6% வட்டி மானியமும் வழங்கப்படும்.

4. தூய்மைப் பணியாளர்களின் குழந்தைகளுக்காக புதிய உயர்கல்வி உதவித் தொகை திட்டம் செயல்படுத்தப்படும்.

5. நகர்ப்புறங்களில் சொந்த வீடு இல்லாததூய்மைப்பணியாளர்களுக்கு, வரும் 3 ஆண்டுகளில், தூய்மைப் பணியாளர்கள் நல வாரியம் உதவியோடு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய திட்டங்கள் மூலம் 30 ஆயிரம் குடியிருப்புகள் கட்டித் தரப்படும். கிராமப்புறங்களில் கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் வீடு ஒதுக்கீட்டில் தூய்மை பணியாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

### காலை உணவு

6. நகர்ப்புற தூய்மைப் பணியாளர்களுக்கு காலை உணவு அந்தந்த நகராட்சிகளின் மூலம் இலவசமாக வழங்கப்படும். இத்திட்டம் முதலில் சென்னை மாநகராட்சியில் செயல்படுத்தப்பட்டு படிப்படியாக மற்ற நகராட்சிகளுக்கும் விரிவுபடுத்தப்படும்.

இவ்வாறு அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்தார்.

நீதிமன்ற உத்தரவால் கைது செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. பலவந்தமாக வெளியேற்ற வேண்டும் என்ற நோக்கம் அரசுக்கு இல்லை. பணி நிரந்தரம் குறித்த வழக்குகளின் முடிவுகளை பொறுத்து நடவடிக்கை எடுக்கப்படும். மற்ற கோரிக்கைகள் குறித்து நீதிமன்றம், தொழிலாளர் தீர்ப்பாயத்தின் வழக்கு முடிவுகளை பொறுத்து தீர்மானிக்கப்படும். தனியார் மயம் என்பது ஏற்கனவே மற்ற மண்டலங்களில் உள்ள நடைமுறைதான். போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தூய்மைப் பணியாளர்களுடன் 12 கட்டமாக பேச்சுவார்த்தை நடைபெற்றது. அனைவரும் வேலை நிறுத்தத்தை கைவிட்டு பணிக்கு திரும்ப வேண்டும் என அரசு சார்பில் கேட்டுக் கொள்ளபடுகிறது. அரசின் கதவுகள் பேச்சுவார்த்தைக்கு எப்போதும் திறந்திருக்கும் என்றும் அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்தார்.

# தமிழக போலீசார் 21 பேருக்கு ஜனாதிபதி விருது

**புதுடெல்லி, ஆக. 14**

**சுதந்திர தினத்தையொட்டி தமிழக காவல்துறையில் 21 பேர் ஜனாதிபதி விருதுக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.**

சுதந்திர தினத்தையொட்டி, நாடு முழுவதும் காவல்துறையில் சிறப்பாகப் பணியாற்றி வருவோருக்கு ஜனாதிபதியின் தகைசால் பணிக்கான விருது, ஜனாதிபதியின் பாராட்டத்தக்கப் பணிக்கான விருது ஆகியவை வழங்கப்பட்டு வருகின்றது. இந்த நிலையில் விருதுக்கு தேர்வானவர்களின் பட்டியலை மத்திய அரசின் உள்துறை அமைச்சகம் இன்று வெளியிட்டது.

2025 ஆண்டுக்கான ஜனாதிபதி விருதுகளுக்கு நாடு முழுவதும் உள்ள பாதுகாப்புப் படை, ஆயுதப் படை, காவல்துறை, தீயணைப்பு, ஊர்க்காவல் படை உள்ளிட்ட துறைகளில் இருந்து மொத்தம் 1,090 பேர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இதில் தமிழக காவல்துறையைச் சேர்ந்த 21 அதிகாரிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

ஏடிஜிபி பால நாக தேவி, ஐஜி ஜி. கார்த்திகேயன், ஐஜி எஸ். லட்சுமி ஆகியோர் தகைசால் விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளனர். எஸ்பி ஏ. ஜெயலட்சுமி, துணை ஆணையர் ஆர். சக்திவேல், எஸ்பி எஸ். விமலா, டிஎஸ்பி பி. துரைபாண்டியன், ஏஎஸ்பி பி. கோபாலசந்திரன், ஏஎஸ்பி கே. சுதாகர் தேவசகாயம், டிஎஸ்பி சி. சந்திரசேகர், உதவி ஆணையர் எஸ். கிறிஸ்டின் ஜெயசில், உதவி ஆணையர் எஸ். முருகராஜ், டிஎஸ்பி எம். வேல்முருகன் ஆகியோர் பாராட்டத்தக்கப் பணிக்கான விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

ஆய்வாளர்கள் பி. பொன்ராஜ், ஜே. அதிசயராஜ், பி. ரஜினிகாந்த் எம். ரஜினிகாந்த், ஆர். நந்தகுமார், பி. ராமகிருஷ்ணன், உதவி ஆய்வாளர்கள் எஸ். ஸ்ரீவித்யா, சி. அனந்தன் ஆகியோரும் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கு ஜனாதிபதி திரவுபதி முர்மு விருதுகளை வழங்கி கவுரவிப்பார்.


Raj TV The People's Channel

**ராஜ் டெலிவிஷன் நெட்ஒர்க் லிமிடெட்**

CIN: L92490TN1994PLC027709

எண். 32, போயஸ் சாலை, இரண்டாவது தெரு, தேனாம்பேட்டை, சென்னை –600 018.

Telephone: 044-24351307/1898, E-mail: comp_secr@rajtvnet.in , Website: www.rajtvnet.in

**ஜூன் 30, 2025 அன்று முடிவடைந்த காலாண்டிற்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள்**

தணிக்கைக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், நிறுவனத்தின் இயக்குனர்கள் குழு, ஆகஸ்ட் 13, 2025 புதன்கிழமை நடைபெற்ற கூட்டத்தில், ஜூன் 30, 2025 அன்று முடிவடைந்த காலாண்டிற்கான தணிக்கை செய்யப்படாத நிதி முடிவுகளை அங்கீகரித்துள்ளது.

கூறப்பட்ட நிதிநிலை முடிவுகள் மற்றும் சட்டப்பூர்வ தணிக்கையாளரின் அறிக்கை ஆகியவை நிறுவனத்தின் இணையதளம் www.rajtvnet.inல் கிடைக்கின்றன, மேலும் விரைவு பதில் (QR) குறியீட்டை ஸ்கேன் செய்வதன் மூலமும் அதைப் பார்க்கலாம்.

குழு உத்தரவுப்படி
ராஜ் டெலிவிஷன் நெட்ஒர்க் லிமிடெட்டிற்காக
எம். ராஜேந்திரன்
நிர்வாக இயக்குனர்
DIN: 00821144

இடம்: சென்னை
தேதி : 13.08.2025

குறிப்பு: மேற்கண்ட தகவல்கள் SEBI (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள்) விதிமுறைகள், 2015ன் விதிமுறை 33 மற்றும் விதிமுறை 47(1)ன் படி உள்ளது.



quintegra **க்விண்டெக்ரா சொலூஷன்ஸ் லிமிடெட்**

CIN: L52599TN1994PLC026867

பதிவு அலுவலகம்: வெஸ்கோ் டவர்ஸ், 3வது தளம், 16 செனடாப் ரோடு, தேனாம்பேட்டை, சென்னை 600 018.

**30.06.2025–ல் முடிந்த காலாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள் சுருக்கம் (தனியானது)**

ரூ. லட்சத்தில்

| விவரங்கள் | முடிந்த மூன்று மாதங்கள் 30.06.2025 | முடிந்த மூன்று மாதங்கள் 30.06.2024 | முடிந்த பன்னிரெண்டு மாதங்கள் 31.03.2025 |
|---|---|---|---|
| | தணிக்கை செய்யாதது | தணிக்கை செய்யாதது | தணிக்கை செய்தது |
| மொத்த வருமானம் (நிகரம்) | | - | -- |
| வரிக்கு பின் சாதாரண நடவடிக்கைகள் மூலம் நிகர லாபம்/(நஷ்டம்) | (3.12) | (3.30) | (8.10) |
| வரிக்கு பின் நிகர லாபம்/(நஷ்டம்) (அசாதாரண அயிட்டங்களுக்கு பின்) | (3.12) | (3.30) | (8.10) |
| சமபங்கு மூலதனம் | 2681.38 | 2681.38 | 2681.38 |
| கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கைபடி மறுமதிப்பீடு ரிசர்வுகள் நீங்கலாக ரிசர்வுகள் | - | - | (3980.75) |
| அசாதாரண அயிட்டங்களுக்கு முன் பங்கு ஒன்றுக்கான சம்பாத்தியம் (ஒன்றின் மதிப்பு ரூ.10/–) (ஏ) அடிப்படை (பி) டைலூட்டட் | (0.012) | (0.012) | (0.030) |
| அசாதாரண அயிட்டங்களுக்கு பின் பங்கு ஒன்றுக்கான சம்பாத்தியம் (ஒன்றின் மதிப்பு ரூ.10/–) (ஏ) அடிப்படை (பி) டைலூட்டட் | (0.012) | (0.012) | (0.030) |

குறிப்பு:

1. மேற்கண்ட முடிவுகள் தணிக்கை குழுவினால் மறுபரிசீலனை செய்யப்பட்டு, 13 ஆகஸ்ட் 2025 அன்று நடைபெற்ற குழு கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டன.
2. SEBI (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015, விதி 33ன் கீழ் ஸ்டாக் எக்சேஞ்சுகளில் தாக்கல் செய்யப்பட்டுள்ள 30 ஜூன் 2025ல் முடிந்த காலாண்டு மற்றும் காலத்திற்கான நிதிநிலை முடிவுகளின் விரிவான வடிவத்தின் சுருக்கமாக மேற்கண்டவை உள்ளது. மேற்கண்ட நிதிநிலை முடிவுகளின் முழுமையான வடிவம் ஸ்டாக் எக்சேஞ் இணையதளங்கள் www.bseindia.com, www.nse.india.com மற்றும் கம்பெனியின் இணையதளம் www.quintegrasolutions.comல் உள்ளது.
3. கம்பெனியின் செயல்பாடுகள் ஒரு பகுதியாக மட்டுமே உள்ளது

குழுவின் சார்பாக
வி. ஸ்ரீராமன்
முழு நேர இயக்குனர்

இடம் : சென்னை
தேதி : 13.08.2025



**ப்ரீமியர் எனர்ஜி அன்ட் இன்ப்ராஸ்டிரக்சர் லிமிடெட்**

பதிவு அலுவலகம்: கீழ்தளம், டாங்கி அபார்ட்மெண்ட்ஸ், 34 டாக்டர் பி வி செரியன் சாலை, எழும்பூர், சென்னை 600 008

Phone No. 044 - 28270041 | E-mail id: premierinfra@gmail.com | CIN:L45201TN1988PLC015521

**30 ஜூன், 2025ல் முடிந்த காலாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள் சுருக்கம்**

ரூ. லட்சத்தில்

| வ. எண். | விவரங்கள் | தனியானது | | | |
|---|---|---|---|---|---|
| | | முடிந்த காலாண்டு | | | முடிந்த ஆண்டு |
| | | 30.06.25 | 31.03.25 | 30.06.24 | 31.03.25 |
| | | தணிக்கை செய்யாதது | தணிக்கை செய்தது | தணிக்கை செய்யாதது | தணிக்கை செய்தது |
| 1 | வருமானம் | 0.43 | 68.30 | 25.56 | 215.56 |
| 2 | லாபம்/(நஷ்டம்) (வரி, விலக்கு அயிட்டங்களுக்கு முன்) | (16.78) | 60.34 | (24.97) | 44.88 |
| 3 | லாபம்/(நஷ்டம்) (வரிக்கு முன், விலக்கு அயிட்டங்களுக்கு பின்) | (16.78) | 61.25 | (24.97) | 45.79 |
| 4 | லாபம்/(நஷ்டம்) (வரிக்கு பின், விலக்கு அயிட்டங்களுக்கு பின்) | (16.78) | 89.55 | (24.97) | 74.10 |
| 5 | ஆண்டுக்கான மொத்த விரிவான வருமானம் | (16.78) | 89.55 | (24.97) | 74.10 |
| 6 | சமபங்கு மூலதனம் | 4135.01 | 4135.01 | 4135.01 | 4135.01 |
| 7 | முந்தைய ஆண்டின் தணிக்கை செய்யப்பட்ட இருப்புநிலைக் குறிப்பில் காட்டப்பட்டுள்ளபடி ரிசர்வுகள் (மறுமதிப்பீட்டு ரிசர்வுகள் நீங்கலாக) | | | | (851.61) |
| 8 | ஒரு பங்கு சம்பாத்தியம் (ஒவ்வொன்றும் ரூ. 10/-) | | | | |
| | 1. அடிப்படை | (0.04) | 0.22 | (0.01) | 0.18 |
| | 2. பலமிழந்தது | (0.04) | 0.22 | (0.01) | 0.80 |

| வ. எண். | விவரங்கள் | ஒருங்கிணைந்தது | | | |
|---|---|---|---|---|---|
| | | முடிந்த காலாண்டு | | | முடிந்த ஆண்டு |
| | | 30.06.25 | 31.03.25 | 30.06.24 | 31.03.25 |
| | | தணிக்கை செய்யாதது | தணிக்கை செய்தது | தணிக்கை செய்யாதது | தணிக்கை செய்தது |
| 1 | வருமானம் | 0.43 | 68.79 | 25.56 | 216.05 |
| 2 | லாபம்/(நஷ்டம்) (வரி, விலக்கு அயிட்டங்களுக்கு முன்) | (29.63) | 44.91 | (34.60) | (7.71) |
| 3 | லாபம்/(நஷ்டம்) (வரிக்கு முன், விலக்கு அயிட்டங்களுக்கு பின்) | (29.63) | 45.82 | (34.60) | (6.80) |
| 4 | லாபம்/(நஷ்டம்) (வரிக்கு பின், விலக்கு அயிட்டங்களுக்கு பின்) | (29.63) | 74.13 | (34.60) | 21.50 |
| 5 | ஆண்டுக்கான மொத்த விரிவான வருமானம் | (29.63) | 74.13 | (34.60) | 21.50 |
| 6 | சமபங்கு மூலதனம் | 4135.01 | 4135.01 | 4135.01 | 4135.01 |
| 7 | முந்தைய ஆண்டின் தணிக்கை செய்யப்பட்ட இருப்புநிலைக் குறிப்பில் காட்டப்பட்டுள்ளபடி ரிசர்வுகள் (மறுமதிப்பீட்டு ரிசர்வுகள் நீங்கலாக) | | | | (424.99) |
| 8 | ஒரு பங்கு சம்பாத்தியம் (ஒவ்வொன்றும் ரூ. 10/-) | | | | |
| | 1. அடிப்படை | (0.07) | 0.18 | (0.07) | 0.05 |
| | 2. பலமிழந்தது | (0.07) | 0.18 | (0.07) | 0.05 |

குறிப்பு:

A. ஜூன் 30, 2025 அன்று முடிவடைந்த காலாண்டு மற்றும் ஆண்டிற்கான மேற்கண்ட தனியான மற்றும் ஒருங்கிணைந்த தணிக்கை செய்யப்படாத நிதி முடிவுகள் தணிக்கைக் குழுவால் மதிப்பாய்வு செய்யப்பட்டு, அவர்களின் பரிந்துரையின் பேரில் ஆகஸ்ட் 13, 2025 அன்று நடைபெற்ற இயக்குனர்கள் குழுவால் அங்கீகரிக்கப்பட்டது.

B. மேலே குறிப்பிடப்பட்டுள்ளவை, SEBI (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள்) விதிமுறைகள், 2015ன் விதி 33ன் கீழ் பங்குச் சந்தையில் தாக்கல் செய்யப்பட்ட ஜூன் 30, 2025 அன்று முடிவடைந்த காலாண்டிற்கான நிதி முடிவுகளின் விரிவான வடிவத்தின் சுருக்கமாகும். தனியான மற்றும் ஒருங்கிணைந்த நிதி முடிவுகளின் முழு வடிவம் BSE இணையதளம் www.bseindia.com மற்றும் நிறுவன இணையதளம் www.premierenergy.inல் கிடைக்கிறது.

ப்ரீமியர் எனர்ஜி அன்ட் இன்ப்ராஸ்டிரக்சர் லிமிடெட்டிற்காக
எம். நாராயணமூர்த்தி
நிர்வாக இயக்குனர்
DIN: 00332455

இடம் : சென்னை
தேதி : ஆகஸ்ட் 13, 2025